


*God in Christianity…*

# *What Is His Nature?*

*Dr. Naji I. Al-Arfaj*

Translated By: Issadeen Rilwan Salafi

---

கிறிஸ்துவ கடவுள் கொள்கையில்......

# அவருடைய இயல்பு என்ன?

தமிழில்:
இஸ்ஸதீன் றிழ்வான் ஸலபி

## சமர்ப்பணம்:

திறந்தமனத்துடனும் நல்லெண்ணத்துடனும் யார் சத்தியத்தை தேடுகின்றார்களோ அவர்களுக்கு இந்நூல் சமர்ப்பணம்.

## உள்ளடக்கம்:


01. படிப்பதற்கு முன் சில கேள்விகள்
02. அறிமுகம்
03. கடவுள் ஒருவரா அல்லது மூவரா? இயேசுதான் கர்த்தரா அல்லது கர்த்தரின் ஒரு அங்கமா?
04. அவர்கள் இருவரும் சமமானவர்களா?
05. இயேசு கர்த்தரின் மகனா?
06. இயேசு யார்?
07. முடிவுரை
08. துணை நூற்கள்

## படிப்பதற்கு முன் சில கேள்விகள்:

1. கிறிஸ்தவ மத நம்பிக்கையின்படி கர்த்தரின் தோற்றம் என்ன?
2. கடவுள் ஒருவரா அல்லது மூவரா?
3. இயேசும் கர்த்தரும் சமமானவர்களா?
4. இயேசுதான் கர்த்தரா அல்லது கர்த்தரின் ஒரு அங்கமா?
5. இயேசு மனிதனின் மகனா அல்லது கர்த்தரின் மகனா?
6. உண்மையில் இயேசு யார்?
7. இது தொடர்பாக உங்கள் கருத்து என்ன?

கீழ்வரும் பந்திகளை நடுநிலையுடன் கவனமாக வாசிக்கவும்:

இயேசு சொல்கிறார், "உண்மையைத் தேடுங்கள் அது உங்களை அமைதிப்படுத்தும்"

இயேசுவின் இந்த கருத்துக்கு அமைய வாழ்க்கையில் உண்மையைத் தேடும் மாணவனாகவும் பல நாட்களாக மேற்கொண்ட ஒப்பீட்டு ஆய்வுக்கு அமையவும் நான் தெரிந்துகொண்டது; கடவுள் கொள்கையில் பைபிளின் கூற்றுக்கும், கிறிஸ்தவர்களின் நம்பிக்கைக்கும் இடையில் மிகப் பெரிய வேறுபாடு உள்ளது, அதாவது மண்ணால் இடப்பட்ட அடித்தளத்திற்கும் உறுதிமிக்க மலைப் பாறைகளால் கட்டப்பட்ட கட்டிடத்தின் அடித்தளத்திற்கும், உள்ள வித்தியாசம் போன்றதாகும்.


இந்தத் தொகுப்பில், கிறிஸ்துவ கடவுள் கொள்கையில் பொதுவாக நாம் விளங்கிக் கொண்டதற்கும், புனித பைபிள் சொல்லுவதற்குமிடையில் பாரிய வித்தியாசத்தை பார்க்க முடிகிறது.

எனது நீண்ட ஆய்வுப்பயணத்தில் எதை கற்றுக்கொண்டேன் என்பதை உங்களுடன் பகிர்ந்து கொள்ள ஆவலாக உள்ளேன்.

இந்த தொகுப்பின் நோக்கம் உண்மையை மக்களிடத்தில் கொண்டு செல்ல வேண்டுமே என்ற ஒரே காரணமே தவிர எவருடைய உள்ளங்களையும் புண்படுத்தப்படுவதற்கல்ல.

இங்கு கிறிஸ்த்தவர்களின் நம்பிக்கையின் படி முற்கடவுள் தொடர்பாகவும், இயேசு அதன் ஒரு பகுதியாக இடம்பெருவது தொடர்பாகவும் கொண்டுள்ள நம்பிக்கையில் எழுகின்ற சில கருத்து வேறுபாடுகளையும் சந்தேகங்களையும் கலந்தலோசிக்கலாம்.

- **கர்த்தர் ஒருவரா அல்லது மூவரா?**
- **இயேசு கர்த்தரா அல்லது கர்த்தரின் ஒரு அங்கமா?**




வாருங்கள்! இதற்கான விடைகளை பைபிளிலிருந்து பெருவோம்!!

”அப்பொழுது ஒருவன் வந்து, அவரை நோக்கி; நித்திய போதகரே, நித்திய ஜீவனை அடைவதற்கு நான் எந்த நன்மையைச் செய்யவேண்டும் என்று கேட்டான். அதற்கு அவர்; நீ என்னை நித்தியன் என்று சொல்வானேன்? தேவன் ஒருவர் தவிர நித்தியன் ஒருவனும் இல்லையே; நீ ஜீவனில் பிரவேசிக்க விரும்பினால் கட்டளைகளைக் கைக்கொள் என்றார்.” (மத்தேயு 19: 16 – 17)

---

❖ ஆங்கிளத்தில் “Why do you call me good?” (என்னை நித்தியனென்று அழைப்பானேன்?) என்கின்ற இந்த சொற்களை அல்லது இதே கருத்துள்ள வசனங்களை சில பைபிள்களில் காணமுடியவில்லை. ஆனால் இது King James Version என்ற பதிப்பில் காணப்படுகின்றது. *இதனை உறுதிப்படுத்துவதற்கு உங்கள் கையிலிருக்கும் பைபிளை தேடிப்பாருங்கள்.*

மேலே உள்ள வசனத்தின் மூலம் பல கேள்விகள் எழலாம், அதில் மிக முக்கியமாக நமது உள்ளுணர்வுகளில் உதிப்பதுதான்:

- **”நீ என்னை நித்தியன் என்று சொல்வானேன்?"** என்பதை இயேசு ஏன் கேள்விக்கு உறப்படுத்தினார்?
- "இயேசு அழுத்தமாகக் கூறுவது, **”தேவன் ஒருவர் தவிர நல்லவன் ஒருவனும் இல்லை"** என்று ஏன் இயேசு கர்த்தரை மட்டுமே நல்லவராக பரிந்துரைக்கிறார்?
- இயேசு கடவுளாக இருந்தால் ஏன் தன்னை ஒரு நித்தியனாக அங்கீகரிக்க மறுக்கிறார்?
- இயேசு வெளிப்படையாக பதிலளிக்கின்றார்: **"நீ ஜீவனில் பிரவேசிக்க விரும்பினால் கட்டளைகளைக் கைக்கொள்”** இதில் இயேசு கேள்விகேட்டவரிடம் தன்னை கீழ்படியும்படி ஏன் ஏவவில்லை?

இயேசுவின் அத்தாட்சிகளின் அடிப்படையில் நித்திய ஜீவனை அடைவதற்கு கட்டளைகளை மட்டும் வைத்திருப்பது போதுமானதா?

இப்போது ஜேம்ஸ் (King James Version') பதிப்பிலும் புதிய சர்வதேச (New International Version) பதிப்பிலும் வருகின்ற, முன்னே சொன்ன மத்தேயு 19: 16 – 17 ஆகிய வசனங்களை மீண்டும் வாசித்துப் பார்ப்போம்.

- ”அப்பொழுது ஒருவன் வந்து, அவரை நோக்கி; நித்திய போதகரே, நித்திய ஜீவனை அடைவதற்கு நான் எந்த நன்மையைச் செய்யவேண்டும் என்று கேட்டான். அதற்கு அவர்; நீ என்னை நல்லவன் என்று சொல்வானேன்? தேவன் ஒருவர் தவிர நித்தியன் ஒருவனும் இல்லையே; நீ ஜீவனில் பிரவேசிக்க விரும்பினால் கட்டளைகளைக் கைக்கொள் என்றார்.”

**’King James Version’**

- "ஒருவர் இயேசுவை அணுகி, ’போதகரே நித்திய ஜீவனைப் பெற நான் என்ன நல்ல செயலைச் செய்ய வேண்டும்?" என்று கேட்டான், இயேசு அவனிடம், எது நல்லது என்பதை பற்றி என்னிடம் ஏன் கேட்கிறாய்? தேவன் மட்டுமே நல்லவர், நீ நித்திய ஜீவனைப் பெற விரும்பினால், கட்டளைகளுக்குக் கீழ்படிந்து நட" என்று பதிலுரைத்தார்.

**’New International Version’**

இதனை இலகுவில் ஒப்பிட்டுப் பார்ப்பதற்கு, இயேசுவின் இரு வேறுபட்ட கேள்விகளை பாருங்கள்:

King James Version (KJV) படி இயேசு கேட்டார்:

- **நீ என்னை நல்லவன் என்று சொல்வானேன்?**

ஆனால், New International Version (NIV) படி இயேசு கேற்கிறார்:

- **”எது நல்லது என்பதை பற்றி என்னிடம் ஏன் கேட்கிறாய்?”**

இந்த இரண்டு பதிப்பிலும் உள்ளவற்றை மனசாட்சியுடன் ஒப்பிட்டுச் சொல்லுங்கள், எது சரி? அல்லது இரண்டும் சரிதானா?

## இயேசு கடவுளா?

மீண்டும் ஒரு ஆய்வு பூர்வமான கேள்விக்குள் நுழைவோம்,

இயேசு கடவுளா?

உண்மையில் இயேசு கடவுளாக அல்லது கடவுளின் ஒரு பகுதியாக? இருந்தால் அவரது இந்த அறிவுபூர்வமான பதில் கேள்வியாளரின் நோக்கத்தை உறுதிப்படுத்துவதாகவும் அங்கீகரிப்பதாகவும் அமையும். (உதாரணமாக, "நித்திய ஆசானே"( “Good Master”).)

கடவுள் தான் நித்தியன் என்பதை இந்த அறிவுபூர்வமான பதில் நிரூபிக்கின்றது.

இயேசு கடவுளாக அல்லது கடவுளின் (மூன்றில்) ஒரு பகுதியாக இருந்தால் இவர் தான் அந்த நித்திய ஜீவனாக இருக்க வேண்டும்.

இது ஏற்றுக்கொள்ளத்தக்கதா?

அந்த வாலிபனுக்கு கீழ்கண்டவாறான பதில்களை அளித்திருப்பார்,

- நிச்சயமாக நான் தான் நித்திய ஜீவன், அதனால் நான் தான் கர்த்தர்,

- நீர் சொல்லுவது சரியானது, நான் தான் நித்திய ஜீவன்.

- அல்லது குறைந்த பட்சமாக நாம் தெரிந்து கொள்வது இயேசு நித்திய ஜீவன், கர்த்தர் அல்லது வெளிப்படையாகவே கர்த்தராக

அறியப்பட்டவராக இருப்பின் அந்த வாலிபனிடம் கேள்வி கேட்காமால் கீழ்கண்ட பதிலை மட்டும் கூறியிருப்பார்:

❖ **"நீ ஜீவனில் பிரவேசிக்க விரும்பினால் கட்டளைகளைக் கைக்கொள் என்றார்."**

ஆனால் இயேசு அந்த இளைஞனுடைய "நித்திய ஆசானே" என்ற அழைப்புக்கு ஆச்சரியப்பட்டவராக, அதனை மறுத்துரைத்து "**நீ என்னை நித்தியன் என்று சொல்வானேன்?** என கேள்வி எழுப்பினார்.

ஆக, இயேசு கடவுள் தன்மையை மறுப்பதன் மூலம், கர்த்தர் என்பவன் தனியான ஒருவன், அதில் இவருக்கு பங்கில்லை என்பதை பகிரங்கப்படுத்துகின்றார்.

இயேசு அவரிடம் கேள்விகேட்ட இளைஞனிடம் தான் யார் என்பதை மறைப்பவராக இருந்தாரா?

❖ **"அந்த மறு உலக வாழ்க்கையில், மக்கள் உன்னைத் தெரிந்து கொள்வார்கள், நீ தான் உண்மையான அந்த ஒரு கடவுள் என்பதையும் மற்றும் இயேசு கிறிஸ்துவை யார் அனுப்பியது என்றும் விளங்கிக் கொள்வார்கள்" (யோவான் 17 : 3)**

இந்த வசனத்தின் மூலம் இயேசு, தான் வேறு என்பதையும் நித்திய ஜீவன் ஒருவர் தான் கடவுள் என்பதையும் வேறுபடுத்திக் காட்டுகிறார்! அப்படியானால் இயேசுவை பூனிக்கு அனுப்ப யார் முழுமையாகத் தகுதிபெற்றவர்?
அந்த **ஒரே ஒரு நித்திய கர்த்தரா? அல்லது இயேசுவா**?
கட்டளையிட்டவரும் அனுப்பியவரும்தான் கர்த்தரா அல்லது கட்டளையிடப்பட்டவரும் அனுப்பப்பட்டவரும் தான் கர்த்தரா?

❖ **"தேவனும் ஒருவரே, தேவனுக்கும் மனுக்ஷருக்கும் மத்தியஸ்தரும் ஒருவரே,**

அந்த மனுக்ஷரே இயேசு கிருஸ்து"
(தீமோத்தேயு 2 :5)

இந்த வசனம் இரண்டு முக்கியமான விடயங்களை அடையாளப்படுத்துகின்றது

1. ஒரு கர்த்தர்,
2. ஒரு வழிகாட்டி (இயேசு)!

இந்த வசனத்தில் "கர்த்தர் இயேசு கிறிஸ்து" என்று சொல்லாமல் "இயேசு ஒரு மனிதரே" என்று சொல்லுவதுடன் எப்போதுமே இயேசுவை பைபிள் எங்கும் கர்த்தராக சொல்லவில்லை.!

**"இயேசு கடவுளா அல்லது கடவுளின் ஒரு பகுதியா?** என்ற கேள்விக்கான பதிலுக்கும் மேலதிக கலந்துரையாடலகளுக்கும் கீழ்வரும் மத்தேயு 4 : 1 – 10 வசனங்களின் பகுதிகளை கவனமாகவும் கருத்தாலமிக்கதாகவும் வாசியுங்கள்.

- "பின்னர் பரிசுத்த ஆவியானவர் இயேசுவை வனாந்தரத்துக்கு அழைத்துச் சென்றார், பிசாசினால் சோதிக்கப்படுவதற்காக இயேசு அங்கு அழைத்துச் செல்லப்பட்டார்.
- அங்கு நாற்பது நாள் இரவும் பகலும் இயேசு உணவேதும் உட்கொள்ள வில்லை, அதன் பின், இயேசுக்கு மிகுந்த பசிஉண்டாயிற்று.
- மறுபடியும், பிசாசு அவரை மிகவும் உயர்ந்த மலையின் மேல் கொண்டுபோய், உலகத்தின் சகல ராஜ்யங்களையும் அவைகளின் மகிமையையும் அவருக்குக் காண்பித்து.
- பிறகு பிசாசு இயேசுவிடம், "நீர் சாஷ்டாங்கமாய் விழுந்து என்னை வணங்கினால், இவை அனைத்தையும் நான் உனக்குத் தருவேன்" என்றான்.

இந்த வசனங்கள் கேள்விகளை எழுப்புகிறதா அல்லது சிந்திக்க தூண்டுகிறதா?

மேலே உள்ள வசங்களை வாசிக்கும் போது எனது உள்ளத்தில் மிக உருக்கமாக எழுந்த கேள்விகளையும் யோசனைகளையும் உங்களுடன் பகிர்ந்து கொள்ள ஆசைப்படுகின்றேன்.

1. பைபிள் சொல்கின்றது "ஆவியானவர் இயேசுவை வனாந்தரத்துக்கு அழைத்துச் சென்றார்,..................." யாருக்கு அதிக அதிகாரமும் சக்தியும் இருக்கிறது என்பதில் நான் ஆச்சரிப்படுகிறேன், இந்த பைபிள் வசனத்தின் படி, இயேசுவுக்கா அல்லது ஆவிக்கா அதிகாரம் கூடுதலாக இருக்கின்றது? இயேசு கர்த்தராக இருந்தால் ஏன் தானாவே வனாந்தரத்துக்கு போகவில்லை? கர்த்தருக்கு வழிகாட்டி ஒருவர் தேவையா?

2. சில கிறிஸ்தவர்கள் இயேசுவை கர்த்தராகப் பார்க்கப்படும் நிலையில் அவர் சாத்தானால் சோதிக்கப்படிருக்கிறார், அப்படியானால் ஒரு கர்த்தர் சோதிக்கப்பட முடியுமா? என்ற சாதாரண, அறிவார்ந்த, ஒரு கேள்வி இங்கு எழுகிறது:

கர்த்தர் பிறரால் சோதிக்கப்பட முடியாது என்பதை இதே பைபிள்தான் சொல்லுகின்றது, இதே சம்பவத்தில் இயேசு மற்றும் அவரது சகோதரர் தொடர்பான விடயத்தில் யாக்கோபில் உறுதியாக சொல்லப்படுகின்றது.
அதாவது;

- **"பொல்லாங்கினால் தேவன் சோதிக்கப் படுவதில்லை, மேலும்தேவன் ஒருவரையும் சோதிப்பதுமில்லை." (யாக்கோபு 1 : 13)**

3. பைபிள் சொல்லுகின்றது "*அங்கு நாற்பது நாள் இரவும் பகலும் இயேசு உணவேதும் உட்கொள்ள வில்லை, அதன் பின், இயேசுக்கு மிகுந்த பசி உண்டாயிற்று*. **(James 1: 13)**

வாருங்கள் இதற்கான காரணங்களை ஆராய்வோம்!

- கர்த்தர் பசித்திருப்பாரா (நோம்பிருப்பாரா)?
- இயேசு யாருக்காக நோம்பிருக்க வேண்டும்? கர்த்தராகிய அவருக்காகவா அல்லது அவரைவிட மேலான ஒருவருக்காகவா?
- கடவுள் பசி அல்லது தாகத்தை உணரகூடியவரா?

4) **"இயேசுவின் சோதனைகள்"** (இந்த தலைப்பை அதிகமான பைபிள் பிரதிகளில் காணலாம்) என்ற கதையில் சாத்தான் இயேசுவை வழிநடத்தியதாகவும் கட்டுப்படுத்தியதாகவும் படிக்க முடிகிறது.! அப்படியென்றால் சாத்தான் மனிதனாகிய இயேசுவையா அல்லது கர்த்தராகிய இயேசுவையா? இவ்வாறு செய்தான் என்ற கேள்வி எழுகிறது. மனித இயேசுவைத்தான் பிசாசு வழிநடத்தியது என்றால் அதன் விளக்கம் என்ன? கர்த்தராகிய இயேசுவைத்தான் பிசாசு வழிகாட்டியது, அங்கும் இங்கும் அழைத்துச்சென்றது என்றால் கர்த்தர் அங்கும் இங்கும் நகர்த்தப்படமுடியுமானவரா, பிறரால் கட்டுப்படுத்தமுடியுமானவரா? யாக்கோபுவின் வசனத்தை இந்த இடத்தில் மீண்டும் ஞாபகமூட்டினால் **"பொல்லாங்கினால் தேவன் சோதிக்கப்படுவதில்லை"** என்று பதியப்பட்டுள்ளது.

இயேசுவுக்கும் சாத்தானுக்குமிடையில் நடந்த கலந்துரையாடலின் கடைசிப்பகுதியில் இயேசுவை பார்த்து **"நீர் கீழே விழுந்து வணங்கு" என்று சாத்தான் வேண்டியது**.

இயேசு சாத்தானிடம் சொன்னார்
**'நீ உன் தேவனாகிய கர்த்தரை மட்டுமே வணங்கவேண்டும், அவருக்கு மட்டுமே சேவை செய்யவேண்டும்!' (மத்தேயு 4:10)**

இயேசு மனித வடிவில் கர்த்தராக உலகிற்கு வந்திருந்தால் சாத்தானுக்கு இலேசாக பதிலளித்திருப்பார் "இல்லை, சாத்தான், **நீ** தான் கீழே விழுந்து உனது கடவுளான **என்னை** வணங்க வேண்டும்" ஆனால் அதற்கு மாற்றமாக அந்த **ஒரே** கர்த்தரை வணங்க வேண்டும் என்று இந்த அத்தியாயத்தில் சொல்லுவது தெரிகின்றது.

அதே நேரம் இந்த சம்பவத்திலிருந்து நாம் தெரிந்துகொள்ளும் விடயம்:
சாத்தான் இயேசுவை **கண்டான்,**
சாத்தான் இயேசுக்கு **சொன்னான்,**
சாத்தான் இயேசுவை **கேட்டான்,**
சாத்தான் இயேசுவை **எடுத்துச் சென்றார்,**
சாத்தான் இயேசுவுக்கு **காண்பித்தான்,**
சாத்தான் இயேசுவுடன் **கதைத்தான்,**
(தயவுசெய்து "இயேசுவின் சோதனைகள்" என்ற தலைப்பில் உள்ள மொத்த வரலாற்றையும் வாசித்துக்கொள்ளவும். மத்தேயு 4: 1 – 10).

ஆனால் கர்த்தரை பார்க்கவும் கேட்கவுமுடியாது. என்று பைபிள் தெளிவாகவும், உறுதியாகவும் சொல்லுகின்றது;

**"எந்த மனிதனும் அவரைப் பார்த்ததில்லை, யாராலும் அவரை பார்க்கமுடியாது" ( 1 தீமோதேயு 6 :16)**

"**நீங்கள் அவர் சத்தத்தை ஒரு பொழுதும் கேட்டதில்லை, அவர் எப்படி இருப்பார் என்று நீங்கள் பார்த்ததும் இல்லை." (யோவான் 5 : 37)**

"**கனமும், மகிமையும் நிரந்தரமான அரசருக்கு இருப்பதாக, அவர் அழிக்கப்படாதவர், பார்க்கப்படாதவர், அந்த ஒரே தேவனுக்கே எப்பொழுதும் கனமும், மகிமையும் உண்டாவதாக." (1 தோமோத்தேயு 1 : 17)**

இந்த தலைப்புக்கு முற்றுப்புள்ளி வைப்பதற்கு முன்னர் ஒரு சந்தேகத்தை வெளிப்படுத்த

வேண்டும். **இயேசு பூமியில் வாழும் போது அவர்களது குடும்பமும் தோழர்களும் அவரை பார்க்கவில்லையா, அவர் பேசியதை அவர்கள் கேட்கவில்லையா?**

அதன் படி கர்த்தரை பற்றி இந்த பைபிள் வசனங்கள் சொல்லுவதற்கமைய **இயேசு கர்த்தராக இருக்க முடியாது.**


உண்மையில் இது அறிவுபூர்வமானதா? அல்லது தர்க்க ரீதியான வாதமா? அப்படியென்றால் எது உண்மை? என்பதை சிந்தித்துதெரிந்து கொள்ளுங்கள்.

| **<u>இப்போது மேலும் சில முக்கியமான கேள்விகள் பற்றி பேசுவோம்</u>.**<br>??? |
|---|

- **பிதா (கர்த்தர்), குமாரர் (இயேசு) மற்றும் பரிசுத்த ஆவி ஆகிய மூவரும் சமமா?**

- **கர்த்தரின் மகனும் (இயேசு) பிதாவும் சமமா?**

- **கர்த்தரின் மகனும் (இயேசு) பரிசுத்த ஆவியும் சமமா?**




இயேசுவே தன்னைப்பற்றி சொன்ன செய்திகளைப் பாருங்கள்:

**"என்னை (இயேசு) விட என் பிதா பெரியவர்" யோவான் (14 : 28)**

**"என் பிதா எனக்கு ஆடுகளைத் தந்தார், அவர் எல்லோரையும் விட பெரியவர்" (யோவான் 10 : 29)**
**"நான் உங்களுக்கு செய்கின்ற உபதேசம் எனக்குச் சொந்தமானவை அல்ல, அவை என்னை அனுப்பினவரிடமிருந்து எனக்கு வந்தது." (யோவான் 7 : 16)**

**"நான் தனியாக எதுவும் செய்வதில்லை, நான் எனக்குச் சொல்லியிருக்கிறபடியே தீர்ப்பளிக்கிறேன், எனவே எனது தீர்ப்பு நீதியானதே, ஏனென்றால் நான் எனக்குப் பிடித்தமானதை செய்வதில்லை; என்னை அனுப்பியவருக்குச் செய்கிறேன்." (யோவான் 5 :30)**

**"எப்பொழுது, எந்த நேரத்தில் அவை நடைபெறும் என்று எவராலும் அறிந்து கொள்ளமுடியாது, இதைப்பற்றி தேவ குமாரனுக்கும் பரலோகத்தில் உள்ள தேவதூதர்களுக்கும் கூட தெரியாது, பிதா மட்டும் இதனை அறிவார்." (மாற்கு 13 : 32)**

**"மனித குமாரனுக்கு எதிராகப் பேசுறவனுக்கு மன்னிப்பு கிடைக்கும், ஆனால் பரிசுத்த ஆவியானவருக்கு எதிராகப் பேசுகிறவனுக்கு மன்னிப்பு கிடையாது, இப்பொழுதோ அல்லது எதிர்காலத்திலோ அவன் மன்னிக்கப்படமட்டான்." (மத்தேயு 12 : 32)**

இங்கு இவ்வாரு தெளிவாக பதியப்பட்டுள்ள அனைத்து வசனங்கள் மற்றும் இது தொடர்பாக இயேசு தன்னைப்பற்றி சொன்னவை அனைத்தையும் பார்க்கும் போது எந்த முடிவுக்கு நாம் வருவது?

இயேசு தன்னைப்பற்றி சொல்லுவதற்கு அமைய நாம் மேலே சொன்ன இந்த தெளிவான கருத்துக்களினடிப்படையில் எந்த முடிவுக்கு வர முடியும்?

இயேசு சொல்லும் இந்த நேர்மையான, நியாயமான, ஆதாரத்திற்கமைய அவரை விடவும் பரிசித்த ஆவியைவிடவும் கர்த்தர் தான் மேலானவர்கள் என்பதை அறிவோம். அத்துடன் கடைசி நாள் எப்போது என்பதையும் இயேசுவும் அந்த பரிசுத்த ஆவியும் ஒருபோதும் அறியமாட்டார்கள்.
நேர்மையாக நின்று தெளிவைத்தேடும் ஒருவர், இயேசு தன்னைப்பற்றி சொல்லிய அனைத்தையும் அதன் படி நம்புவதுடன் இயேசுவை கர்த்தராக அல்லது அதற்கு சம்மான அந்தஸ்துடையவராக ஒருநாளும் பார்க்கமாட்டார்.!

**<u>இன்னுமொரு மிக முக்கியமான கேள்விக்குச் செல்வோம்.</u>**

**?**

**இயேசு மட்டும் தான் கர்த்தரின் மகனா?**

இதற்கும் புனித பைபிளிலிருந்தே பதிலை பெருவோம் வாருங்கள்!

**"ஆதாம் தேவனின் மகன்" (லூக்கா 3 : 38)**

**"இஸ்ரவேல் எனது முதற்பேறான (முதல்) மகன்" (யாத்திரகாமம் 4 :22)**
"**இப்போது கர்த்தருடைய உடன்படிக்கையை உனக்குக் கூறுகிறேன், கர்த்தர் என்னிடம், "இன்று நான் உனக்குத் தந்தையானேன்! நீ எனக்கு மகன்," (சங்கீதம் 2 :7)**

இந்த பைபிள் கூறுவதற்கமையவும் பிதா சொல்லுவதற்கமையவும் தாவிதும் அவரது ஒரு மகனாகும். (Son **-with a capital 'S')!**

**"அமைதிக்காகச் செயலாற்றுகிறவர்கள் ஆசீர்வதிக்கப்பட்டவர்கள், தேவன் அவர்களைத் தன் குமாரர்கள் என அழைப்பார்." (மத்தேயு 5 : 9)**

"கர்த்தரின் குமாரர்" என்ற தலைப்பில் பைபிளில் தேடினால் இயேசு மாத்திரம் மகன் என்றில்லாமல் பல இடங்களில் "கர்த்தரின் குமாரர்கள்" என்று பலர் இருப்பதாக சொல்லுவதைப்பார்க்கலாம்.

இதற்கமைய 'கர்த்தரின் குமாரர்' என்று அடையாளப்படுத்துவது அனைத்தும் குறிப்பிடப்பட்ட, கௌரவத்தினடிப்படையில், மதிக்கும் நோக்கில் அமைந்த பட்டியலாகும்.

**இவைகள் அனைத்தும் ஒரு முக்கியமான, சிந்திக்கத்தக்க வினாவைத் தொடர உதவும்!**

## அப்படியானால், யார் அந்த இயேசு?

பைபிள் வசனங்களை அடிப்படையாக வைத்து சிந்திக்கும், கலந்தாலோசிக்கும் போது கர்த்தர் என்பர் ஒருவரே, மூவரல்ல, இயேசு கர்த்தருமில்லை, கர்த்தரின் ஒரு பகுதியுமில்லை. அத்துடன் இதை மொழி, இலக்கிய, பாவணையினடிப்படையில் பார்த்தால் கூட இயேசு கர்த்தரின் மகனல்ல என்பது தெளிவு.

அப்படியென்றால், **இயேசு என்பவர் யார்?**

**இயேசு ஒரு மனிதரே.**

இயேசு ஒரு "மனிதர்" அல்லது "மனிதரின் ஒரு மகன்" என்று பாவிக்கப்படும் பல வசனங்களை பைபிளிலிருந்து பார்க்க கிடைக்கின்றது.

உதாரணத்திற்கு சில வசனங்களை இங்கு ஞாபகப்படுத்தலாம்:

**"எனது யூத சகோதர்களே, இந்த வார்த்தைகளைக் கவனியுங்கள், நாசரேத்தின் இயேசு மிகச் சிறப்பான மனிதர், தேவன் இதைத் தெளிவாக**

**உங்களுக்குக் காட்டினார். இயேசுவின் மூலமாக அவர் செய்த வல்லமை மிக்க வியப்பான காரியங்களால் தேவன் இதை நிரூபித்தார், நீங்கள் எல்லோரும் இந்தக் காரியங்களைக் பார்த்தீர்கள், எனவே இது உண்மையென்பது உங்களுக்குத் தெரியும்." (அப்போஸ்தலர் 2 : 22)**

இந்த சொற்கள் இயேசுவின் மிக நெருங்கிய நண்பனும் தோழருமாகிய பீட்டரினால் சொல்லப்பட்டவைகளாகும்.
அவர் மிக முக்கியமான சாட்சியாக இருந்து இதை விவரிக்கிறார்.

**"மனிதகுமாரன் வந்திருந்து மற்றவர்களைப் போலவே உண்ணுகிறார்; திராட்சை இரசமும் குடிக்கிறார்." (மத்தேயு 11 : 19)**

**"இந்த மனிதர் உண்மையான தீர்க்கதரிசிதான்" (யோவான் 7 : 40)**

**"நான் தேவனிடமிருந்து கேட்ட உண்மையை உங்களுக்குச் சொல்லுகின்ற மனிதன், ஆனால் நீங்கள் என்னைக் கொல்ல முயலுகிறீர்கள்." (யோவான் 8 : 40)**

(ஆனால் இந்த உண்மை சில பைபிள்களில் வெளிப்படுத்தப்படவில்லை. அதனால் உங்கள் கையிலிருக்கும் பைபிளை சரி பார்த்துக்கொள்ளுங்கள்)

இயேசு தனது வாழ்க்கையில் சிக்கலான சந்தர்ப்பங்களில் கூட தன்னை ''ஒரு மனிதன்'' என்றே உறுதிப்படுத்தினார். ஏன் அவர் தெளிவாகவும் வெளிப்படையாகவும் 'உண்மையை உங்களுக்கு சொல்ல மனித உருவில் வந்த ஒரு கர்த்தராகிய என்னை நீங்கள் கொல்லத் தேடுகிறீர்கள்' என சொல்லவில்லை? கர்த்தர் உண்மையை மறைப்பது சாத்தியமா?

**இயேசு ஒரு தீர்க்கதரசியே.**

- "இதுதான் நாசரேத்திலிருந்து வந்துள்ள தீர்க்கதரிசி" (மத்தேயு 21 : 11)

- "ஒரு தீர்க்கதரசியை அவனது சொந்த நகரத்தார் ஏற்றுக்கொள்வதில்லை" (லூக்கா 4 : 24)

- "நான் உங்களுக்கு உண்மையாகவே கூறுகிறேன், ஒரு வேலைக்காரன் தன் எஜமான்னை விடப் பெரியவன் அல்ல, ஒருவன் என்னதான் பெரிய காரியங்களைச் செய்தாலும் அனுப்பப்பட்டவன் அனுப்பியவனை விடப் பெரியவனல்ல." (யோவான் 13 : 16)

- "இவர் உண்மையிலேயே உலகத்தில் வருகிறவரான தீர்க்கதரசியாக இருக்க வேண்டும்" (யோவான் 6 : 14)
- "அவர் ஒரு பெரிய தீர்க்கதரசி" (லூக்கா 24 : 19)

இவைகள் தான் இயேசு உண்மையான கர்த்தரின் ஒரு தீர்க்கதரசியாகவும் தூதனாகவும் தான் இருந்தார் என்பதற்கு பைபிளிலிருந்து அடையாளம் காட்டமுடியுமான சில ஆதாரங்கள். மேலும் ஒரு போதும் பைபிள் எங்கேயாவது அவரை கடவுளாக சித்தரித்ததில்லை.

**இயேசு பற்றி மறக்கமுடியா, மறைக்கமுடியா ஒரு கடைசித் தகவல்!**

> **"கிறிஸ்து பூமியில் வாழ்ந்தபோது, அவர் தேவனிடம் உரத்த சத்ததோடும் கண்ணீரோடும் பிராத்தனை செய்தார், மரணத்திலிருந்து அவரைக் காப்பாற்ற வல்ல ஒருவனிடம் அவர் பிராத்தனை செய்தார், தேவன் மீது இயேசுவுக்கு இருந்த மிகுந்த மரியாதையின் காரணமாக தேவன் அப்பிராத்தனையை பின்னர் கேட்டார்."   (எபிரேயர் 5 :7)**

**மேலே ஞாபகமூட்டிய பைபிள் வசனங்கள் மூலம் முடிவாக எந்தச் செய்திகளை சொல்லமுடியும்?**

## இறுதியாக (முடியுரை):

கர்த்தர் ஒருவரே என்ற பிரகடனத்தை இங்கு அடையாளப்படுத்துகின்ற புனித பைபிள் வசனங்கள் உருதிப்படுத்துகின்றன.

**"நான் உண்மையான தேவன் என்பதையும் நீங்கள் புரிந்துகொள்ள வேண்டும், எனக்கு முன்பாக வேறு தேவன் இருந்ததில்லை, எனக்குப் பிறகும் வேறு தேவன் இருக்கப் போவதில்லை, நானே கர்த்தர்! என்னைத்தவிர வேறு இரட்சகர் இல்லை! நான் ஒருவர் மட்டுமே!" (ஏசாயா 43 10 – 11)**

**"எந்த விதமான விக்கிரகத்தையும் தொழுகை செய்யவோ அதை சேவிக்கவோ கூடாது, ஏனெனில் நானே உங்கள் தேவனாகிய கர்த்தர்." (யாத்திரகாமம் 20 : 5)**

இதே கருத்தில் வரக்கூடிய நூற்றுக்கணக்கான வசனங்களை புனித பைபிளிலிருந்து காணக்கிடைக்கின்றது. ஆனால் இங்கு அடையாளப்படுத்திய சில வசனங்கள் போதுமானதாகும்.*

----------------------

**தயவு செய்து கீழே கூறப்பட்டுள்ள குறிப்பைப் பார்க்கவும்.*

இயேசு அந்த நித்திய கர்த்தரின் ஒரு தீர்க்கதரசி மட்டுமே அந்த கர்த்தர் தான் இயேசுவையும் எம்மையும் மற்றும் இந்த உலகின் அனைத்தையும் படைத்தான்.

உண்மையைத் தேடும் இந்த பயணத்தில் உங்கள் சிந்தனைக்கு சில கேள்விகளை விட்டு விட ஆசைப்படுகிறேன்!

❖ உரிய இடத்தில் உரியதை சொல்லுவது காலத்தின் கடமையில்லையா?

❖ இயேசுவுக்கு உரிய கௌரவத்தைக்கொடுத்து அவரை ஒரே ஒரு கடவுளின் தூதுவராக பார்ப்பது எமக்கு கடமையில்ல்லையா?

❖ நாம் மரணிப்பதற்கு முன்னர் எம்மை படைத்த சர்வ சக்தியுடைய அந்த ஒரே ஒரு நித்திய கர்த்தரை தொழுவதற்கு அவன் பக்கம் திரும்புவது காலத்தின் கடமையில்லையா?

*குறிப்பு:*

- முற் கடவுள் கொள்கை (divinity), கடவுளுக்கு மகன் இருப்பதாக நம்புதல் (sonship of Jesus), உயர்ந்த தீமைகள் (original sin), சிலுவை கோட்பாடு, இயேசுவின் சிலுவைச் சம்பவம் (crucifixion), இயேசு இரத்தம் சிந்தியது உலக மக்களின் பாவத்தை போக்கத்தான் போன்ற விடயங்கள் உற்பட கிறிஸ்துவ கொள்கையில் பல மாற்றங்களையும் திருத்தங்களையும் மேற்கொண்டவர் இன்று பல்லாயிரக்கணக்கான பைபிள் அறிஞர்களால் நம்பப்படும் பௌல் அடிகள் **(கி.பி. 5ல் பிறந்தவர்.!)** தான்.

பௌல் புதிய ஏற்பாட்டிலுள்ள 4 அதிகாரங்களுக்கு (Gospels) முன்னர் எழுதிய இந்த செய்திகளை கிறிஸ்துவ அறிஞர்கள் பாரிய அளவில் ஏற்றுக்கொள்கின்றனர்.
பௌலின் நம்பிக்கைகளும் போதனைகளும்தான் பிற்காலத்தில் அதாவது இன்றைய கடவுள் கொள்கையில் (nature of God), மாற்றங்களை செய்யவும் உண்மைக்கு மாற்றமாக நிறந்தீட்டவும் உதவின.

இது தொடர்பான மேலதிக விளக்கங்களுக்கு வெளிவர இருக்கின்ற எனது **"What Went Wrong?"** என்கின்ற ஆக்கத்தை பார்க்கவும்.

**கடைசியாக உங்கள் சிந்தனைக்கு நான் விட்டுச்செல்வது..........**

இந்த சுருக்க ஆக்கத்தை கவனமாக, நேர்மையான, நடுநிலையான சிந்தனையுடன் வாசிக்கின்ற போது சில கேள்விகள் எமது சிந்த்னையில் தோன்றிரும். உதாரணமாக;

- எது உண்மை?
- யார் உண்மையான கர்த்தர்?
- அவரது உண்மையான தூது எது?
- எங்கே தவறு நடந்திருக்கின்றது?

இன்க்ஷா அல்லாஹ், இந்த கேள்விகளுக்கும் கருத்துபரிமாற்றங்களுக்கும் எதிர்வர இருக்கும் ஆக்கங்களில் பார்க்கலாம்.

**துணை நூற்கள்:**


1- The Holy Bible. King James Version.
2- Good news Bible. Today's English Version.
3- Holy Bible. New International Version.
4- Holy Bible. Revised Standard Version.
5- The Bible Library. 29 works on one CDROM disc. It includes 9 Bibles and 20 Biblical references. 1995 Ellis Enterprises, Inc. Oklahoma, USA.
6- The Multi-Bible CD-ROM. Innotech Multimedia, Inc. Ontario, Canada.
7- பல இணையத்தள பக்கங்கள் several web sites from the Internet.
8- Information and feedback from my public lectures' audience and my Weekly TV program's viewers.
9-World Bible Translation Center- site: http://www.wbtc.org 2006, 'the Holy Bible –Tamil English by TamilChristian's Global Network 2005' ஆகிய மென்பொருள் தொகுப்புக்களின் தமிழ் மொழிபெயர்ப்புக்கள்.

பிரயோசனமான இணையத்தளங்கள்
_ www.sultan.org
_ www.al-sunnah.org

உங்களுடைய கருத்துக்களையும் திருத்தங்களையும் வரவேற்கின்றோம்.

உங்களுடைய கருத்துக்களுக்கும் ஆலோசனைகளுக்கும் தொடர்புகொள்ள வேண்டிய முகவரி:

Dr. Naji I. Al-Arfaj
Website: www.abctruth.net

E-mail: abctruth@hotmail.com
info@abctruth.com
P. O. Box 418
Hofuf, Al-Ahsa 31982 KSA


Issadeen Rilwan Salafi
Website: www.changesdo.blogspot.com

Email: dochanges@gmail.com
Riyadh
Saudi Arabia.

**இந்த புத்தகத்தை வாசித்துவிட்டு உங்கள் கருத்துக்களை பகிர்ந்துகொள்வீர்கள் என ஆசைப்படுகின்றேன்.**